[*2023 மார்ச் 30*

மேலும், மாவட்டத்திற்கு ஒன்று வீதம் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைக்கபட்டுள்ள மற்ற மூன்று சமத்துவபுரங்களும் விரைவில் திறந்து வைக்கப்படும்.

149 சமத்துவபுரங்களில் வாழும் மக்கள் பயனடையும் வகையில் *11,332* வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், *2,364* வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் *1,939* பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டது.

சமத்துவபுரங்கள் சீரமைப்பு கட்டம்-II

இரண்டாம் கட்டமாக, மீதமுள்ள *88* சமத்துவபுரங்களில் *7,574* வீடுகளில் சிறு பழுது நீக்கும் பணிகள், *60* வீடுகளை மீளகட்டும் பணிகள் மற்றும் *650* பொது அடிப்படை வசதி தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு

"குடிசைகள் இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையை அடைய வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. நிரந்தர வீடு தேவைப்படும் நிலையில் உள்ள குடும்பங்களுக்கான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பில் குடிசைகள், நிலைத்த தன்மையற்ற மற்றும் வாழத் தகுதியற்ற வீடுகளில் வாழும் சமுக பொருளாதார சாதி வாரி கணக்கெடுப்பு, ஆவாஸ் ப்ளஸ், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் - மறுகணக்கெடுப்பு, புதிய குடிசைகள் கணக்கெடுப்பு ஆகிய பட்டியல்களில் இடம் பெறாத குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு, கள சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசுத் திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுது நீக்கம் மேற்கொள்வதற்கான கணக்கெடுப்பு

1970 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களுக்கு மானில மற்றும் ஒன்றிய அரசு பங்களிப்புத் திட்டங்களின்மூலம் வீடுகள் வழங்கி வருகிறது. *2010-11* ஆம் ஆண்டுக்கு முன்னதாக கட்டப்பட்ட வீடுகளின் தற்போதைய நிலை குறித்து அறிந்திடும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சமுதாய வள பயிற்றுநர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள்மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.